★ ★
Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

ஒளி 7 EELA NADU இதழ் 162
National Tamil Daily தேசிய தினசரி
(24-7-65)
விசுவாவசு ஆடி 9 ரபி அவ்வல் பிறை 24 சனிக்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12 போன்: 5830

### விஞ்ஞான அதிசயம்

கேப்கெனடி ஜூலை 24 "மெரினர் 4" செவ்வாய்க் கிரகத்தின் இறுதிப்படங்களை இன்று அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் ஆரம்பத்திலிருந்து எல்லா போட்டோக்களையும் மீண்டும் அனுப்புமாறு அதனிடம் விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர். பழையபடங்களுடன் அவற்றை மற்றொருதடவை ஒத்துப் பார்த்தபின் மக்களுக்கு வெளிவிடும்மாக இவ்வாறு கேட்கப்பட்டுள்ளதாம்.

# ஸ்டான்லி வீதியில் புதிய பஸ் நிலையம்

## மேயர், அதிகாரிகள் நேரில் பரிசீலனை

## 28-ந் திகதி மந்திரியுடன் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண நகரில் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு புதியதொரு இடத்தைத் தெரிவு செய்வதில் யாழ்ப்பாண நகர மேயர் திரு எஸ். வி. மகாதேவா ஈடுபட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் வின்ட்சர் தியேட்டருக்கு முன்பாக குளத்துக்கு அருகேயுள்ள பெரிய காணியில் புதிய பஸ் நிலையம் அமைப்பது பற்றி மேயர், இலங்கை போக்குவரத்து அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்ததாகத் தெரிகிறது. (3-ம் பக்கம் பார்க்க)

## 'வாக்காளர்களை பதிவுசெய்யும் முறையில் மாற்றம் இருக்காது'

### ஸ்ரீமதி பண்டாரநாயகா தூதுகோஷ்டியில் பிரதம மந்திரி டட்லி விளக்கம்

கொழும்பு, வெள்ளி

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் பதவியேற்றபின் வாக்காளர்களைப் பதிவுசெய்யும் முறையில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லையென பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று காலை தம்மைச்சந்தித்த எதிர்க்கட்சி எம். பிக்களிடம் கூறினார்.

இவ்விஷயம் பற்றி நடைபெற்ற பேச்சுக்களில் பிரதமருக்கு ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, தேர்தல் கமிஷன் திரு. டயஸ் அடயசிங்கா ஆகியோர் உதவி அளித்தனர். எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமதி பண்டாரநாயகா தலைமையில் டாக்டர் என். எம். பெரேரா, திரு ஆர் சேனநாயாகா, திரு. மைத்திரி பாலசேனநாயகா, திரு. பீட்டர் கெனமன், திரு. டி. பி. எம் ஹேரத், திரு. பி. எச். பண்டார, செனட்டர் தலநாயகா ஆகியோர் பிரதமரைப் பேட்டிகண்டனர். இந்திய வம்சாவளிப் பிரஜைகள் ஆகியோரை வாக்காளர் இடாப்

(5ம் பக்கம் பார்க்க)

## கங்கையைத் திருப்புவது பற்றி 7 நிபுணர் பரிசீலனை

கொழும்பு, வெள்ளி

மகாவலி கங்கை நீரை வட மத்திய, வடக்கு மாகாணங்களில் விவசாயத்துக்கு உபயோகிப்பதற்கான சாத்தியங்கள்பற்றியும், மகாவலிகங்கை நீரிலிருந்து நீர்மின்சார உற்பத்தி செய்வதற்கான சாத்தியங்களை பற்றியும் ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட அமெரிக்க நிபுணர் கோஷ்டியொன்று இப்பொழுது பரிசீலனை செய்து வருகிறது.

இப்பொழுது மகாவலிகங்கையின் நீர் 90,000 ஏக்கர் நிலத்திற்குத்தான் பாசனத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. மகாவலி கங்கையின் வலதுபுற ஆற்றுப்படுக்கையின் முழுப்பகுதியும் விவசாயத்துறைக்குப் பயன்படுத்த போட்டால் சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யக்கூடியதாக இருக்குமெனக்கருதப்படுகிறது.

மகாவலிகங்கையின் எஞ்சிய நீரை பயன்படுத்தக்க வகையில் எவ்விதம் உபயோகிப்பது என்பது எப்போதும் ஒரு பிரச்னைக்கான விஷயமாக இருந்துவந்துள்ளது.

இந்த நீரை மின்சார சக்திக்கும், வரண்டபிரதேசங்களில் (வடமத்திய மாகாணம், வடக்கு மாகாணம் ஆகிய மாகாணங்களில்) நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படுத்துவது பற்றியும் நீர்ப்பாசன இலாகா ஆராய்ந்துவந்துள்ளது.

## தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு:
15 B 0995 ரு 87,760-00

இரண்டாவது பரிசு:
01 B 0998 ரு 15,104-00

மூன்றாவது பரிசு:
14 Z 0178 ரு. 8,776-00

(2-பக்கம் பார்க்க)

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518
தந்தி: "யப்பான்"

# யாழ்ப்பாணத்தில் கல்வி மந்திரி

## ரயில் நிலையத்தில் அமைதியான ஆடம்பரமற்ற வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

கல்வி கலாசார மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கும், அவரது பாரியாருக்கும் நேற்று நண்பகல் ஆடம்பரமற்ற அமைதியான வரவேற்பு அளிக்கப்பட்டது. மேளதாள வாத்தியம், அலங்கார ஜோடனை ஆதுவுமற்ற இந்த அமைதியான வரவேற்பில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கல்வி கலாசார மந்திரியை வரவேற்பதற்காக யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில் நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் மக்கள் கூடவாரம்பித்துவிட்டனர். கல்வி இலாகா சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும், பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களுமே இக்கூட்டத்தில் அதிகமாகக் காணப்பட்டனர்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, யாழ்ப்பாண நகர மேயர் திரு. சு. செ. மகாதேவா, வட்டபகுதி உதவி வித்தியாதிபதி திரு தணிகாசலம், அவரது பாரியார் ஆகியோரும் இவ்வரவேற்பில் கலந்துகொண்டனர்.

### எம். பி.க்கள் பிரமுகர்கள்

தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்கள், மற்றும் பிரமுகர்களும், மந்திரியை வரவேற்பதற்கு வந்திருந்தனர். கட்சிக் கொடிகள் பறக்கவிடப்பட்ட ஏராளமான கார்கள் புகையிரதநிலையத்திற்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்தன.

கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை, உடுப்பிட்டி எம் பி திரு எம் சிவசிதம்பரம், சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம், உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம், காங்கேசன்துறை எம் பி திரு வி நவரத்தினம் ஆகியோர் வந்திருந்தனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

வைத்தீஸ்வர வித்தியாலய
பெற்றோர் தின விழா
நிகழும் யூலை மாதம் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4-45 மணி தொடக்கம்
கௌரவ கல்வி மந்திரி
I. M. R. A இரியகொல்லை அவர்களினதும்
யாழ்ப்பாணப் பிரதிநிதி
திரு. G.G. பொன்னம்பலம் Q C. அவர்களினதும்
ஆதரவில் நடைபெறும்.
இவ்விழாவிற்கு பெற்றோர், பழையமாணவர்கள்,
அன்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

[illegible]

நெல்லும் கரும்பும் நிலத்திற்கு அணிகலன். தாமரை குளத்திற்கு அணிகலன். பெண்மைக்கு அணிகலன் நாணம். தான் செய்யும் நன்மைகளே ஒருவனுக்கு அணிகலன்.

—(விளம்பிநாகனார்)


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49, Jaffna.
Grams: "EELANADU", Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி 9 (24-7-65)


## கிராமாபிவிருத்தி இயக்கம்

இந்நாட்டில் கிராமாபிவிருத்தி இயக்கத்தின் திட்டங்களும் கொள்கைகளும் இருபது வருடங்களுக்குமுந்தியவை யென்றும் இவைகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு திருத்தப்படவேண்டுமென்றும் குடிசைக் கைத்தொழில் கிராமாபிவிருத்தி அதிபர் தமது 1963-64ம் வருடாந்த நிர்வாக அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். இந்த யோசனையை அரசாங்கம் விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.

காலமாறுபாட்டுக்கேற்ப ஸ்தாபனங்களின் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் மாறுதல் அடையவேண்டும். அப்பொழுதுதான் சமுதாயம் வளர்ச்சியடைய முடியும். சென்ற இருபது வருடங்களுக்குள் நாட்டின் சமூக, பொருளாதார நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தோன்றியதன் நோக்கமே சமுகத்தை முன்னேற்றுவதும் பொருளாதாரத்தை விருத்தி செய்வதுமேயாகும். சமூக பொருளாதார மாறுதல்களுக்கேற்ப கிராமாபிவிருத்திச் சங்கங்களின் கொள்கைகளும் திட்டங்களும் மாற்றப்பெறுவிடின் அந்த ஸ்தாபனங்களின் நோக்கம் நிறைவேறாமல்போவதுடன் அந்த ஸ்தாபனங்களால் வீண் செலவுதான் ஏற்படும்.

1963-64-ம் ஆண்டில் இலங்கையில் 8,541 கிராமாபிவிருத்திச் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலும் பெயரளவில்தான் சங்கங்களாக இருக்கமுடியும். அதற்கு அவைகளைக் குறை சொல்லிப் பயனில்லை. காரணம் காலத்துக்கேற்ற முறையில் கொள்கைகளும், திட்டங்களும் மாற்றியமைக்கப்படாத வரையில் சங்கங்கள் சரியான முறையில் இயங்கமுடியாதென்பது உண்மை. கிராம அபிவிருத்திக்காகக் கிராமாபிவிருத்தி இலாகா ஒன்றும் இயங்கிவருகிறது. கிராமாபிவிருத்திச்சங்கங்களுக்கு உதவி அளிப்பதும், அவைகள் மூலம் குடிசைக் கைத்தொழில்களை விருத்திசெய்வதும் இந்த இலாகாவின் முக்கிய கடமைகள். எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தின் உதவியையே எதிர்பார்த்துப் பழகிப்போன இலங்கை மக்கள், கிராமாபிவிருத்தி இலாகாவின் உதவியை எதிர்பார்த்திருப்பதில் ஆச்சரியமில்லை. நாட்டின் பொருளாதாரநிலை மோசமடைந்துள்ள இச்சமயத்தில் கிராமப்புறங்களில் குடிசைக் கைத்தொழில்களை நவீன முறையில் விருத்திசெய்வதற்குக் கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மூலம் கிராமாபிவிருத்தி இலாகா முயற்சிசெய்யலாம். இருபது வருடங்களுக்கு முன்னிருந்த நிலைமை இன்று முற்றிலும் மாறுபட்டது. கிராமப்பகுதிகளில் இன்று வசதிகளும் அதிகரித்துள்ளன. அத்தியாவசியப்பொருள்கள் மட்டுமல்ல, ஆடம்பரபொருள்கள் பலவற்றைக்கூட நவீன முறையில் கிராமங்களில், குடிசைக் கைத்தொழில்களாக உற்பத்திசெய்ய நிறைய வசதியும், வாய்ப்பும் இருக்கிறது. சரியான உதவியும், ஊக்கமும் அளிக்கவேண்டியதுதான் இன்றைய தேவை. இதற்கு கிராமாபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில் அதிபர் தமது நிர்வாக அறிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பதுபோல் இன்றைய சமூக, பொருளாதார மாறுதலுக்கேற்ப, கிராமாபிவிருத்தி இயக்கத்தின் கொள்கைகளையும், திட்டங்களையும் உடனடியாக மாற்றியமைப்பது தான் சரியான வழி

# நஷ்டஈடு வழக்கில் 30,000 வழங்க தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

தொழில் உத்தியோகத்தர் திரு கே. விஜயரத்தினம் என்பவர் மீது 50,000 ரூபா நஷ்டஈடு கோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில், உதவி மிருகவைத்தியர் ரி. தேவதாசன் தொடர்ந்த வழக்கில் மாவட்டநீதிபதி 30 000 நஷ்டஈடு வழங்கும்படி தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில், 1962ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந் திகதி பலாலி வீதியில் ஸ்கூட்டரில் செல்லும் போது காரினால் மோதி காயம் விளைவித்ததாகவும் அதற்காக 50,000 ரூபா நஷ்டஈடு கோரப்பட்டிருந்தது.

மாவட்ட நீதிபதி தீர்ப்பில் தெரிவித்திருப்பதாவது: 'நான் வழக்காளியின் கூற்றை ஏற்றுக்கொள்ளுகிறேன். எதிரியினுடைய கார் தான் ஸ்கூட்டர் மேல் மோதியது. எதிரியின் கவலையீனத்தால் தான் இவ் விபத்து ஏற்பட்டதென்பதையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன், இந்த வழக்கில் எல்லா அம்சங்களையும் கருத்தில் கொண்டு வழக்காளிக்கு 30 000 ரூபா நஷ்டஈடு வழங்கும்படி தீர்ப்பளிக்கிறேன். வாழ்க்கையின் சுகத்தை அனுபவிக்கமுடியாதென்ற காரணத்திற்காக 25,000 ரூபாயும் அவரின் வேலைசெய்யும் திறமை பாதிக்கப்பட்டதற்காக 5000 ரூபாயும் வழங்கும்படி தீர்ப்பளிக்கிறேன்.

எதிரிசார்பில் வழக்கறிஞர் திரு பி சோமத்திலம் திரு ஏ. சுவாம்பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி சார்பில் வழக்கறிஞர் திரு எஸ். சூரசங்காரம திரு சி. தனபாலசிங்கத்தின் உதவியுடன் திரு ரி. ஆரியநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## காலி மாநகரசபை தேர்தல்

காலி, வெள்ளி

புதிப்பிக்கப்பட்டுள்ள காலி மாநகரசபையினர் தேர்தல் இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறும்.

நிதிநிலைமை காரணமாக இச்சபை 1962-ம் ஆண்டு கலைக்கப்பட்டு. இதுவரை காலமும் தேர்தல் நடைபெறாமல் இருந்தது.

## யாழ்ப்பாணத்தில்:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### துண்டுப்பிரசுர விநியோகம்

கல்வி மந்திரியின் வரவைப் பகிஷ்கரிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரங்களைச் சில வாலிபர்கள், தேர்ச்சாலை வாசல்களிலிருந்து பொதுமக்களுக்கு விநியோகித்தவண்ணமிருந்தனர். "கல்விமந்திரிக்கு வரவேற்பா" என்று எழுதப்பட்ட பெரிய சுவரொட்டிகள், யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய இடங்களிலெல்லாம் ஒட்டப்பட்டிருந்தன

மக்களின் ஆவலைத்தூண்டும் விதமாக 'யாழ்தேவி' தாமதித்து சரியாக 1-40 க்கு புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. புகையிரதப்பெட்டியில் நின்றபடியே மந்திரி திரு. இரியகொல கைகூப்பி வணக்கம் தெரிவித்தார். உதவிவித்தியாதிபதி திரு. தணிகாசலம், கல்விமந்திரிக்கு மாலை சூட்டி வரவேற்றார். திரு. தணிகாசலத்தின பாரியார், திரு. இரியகொல்லவின் பாரியாருக்குமலர்ச்செண்டை அளித்தார்,

வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. அம்பிகைபாகன் மந்திரிக்கு மாலை சூட்டினார் அதன் பின் திரு தணிகாசலம், கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களையும், கல்லூரி அதிபர்களையும், ஆசிரியர்களை மந்திரிக்கு அறிமுகம்செய்து வைத்தபோது அவர் கைகூப்பி வணக்கம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சருடன் கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு எம். ஜே பெரேரா வித்தியாதிபதி திரு ஈ. எச். டி. அல்விஸ் ஆகியோர் வந்திருந்தனர் புகையிரத நிலையத்திலிருந்து அவர்கள் கிங்ஸ் கவுஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

### தொழிற்சங்க வேண்டுகோள்

ஆசிரியர்களை பழிவாங்கும் அமைச்சருக்கு அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சிகளை பகிஷ்கரிக்கும் படியும் அதன் மூலம் எதிர்ப்பை காட்டும்படியும். ஆறு சங்கங்கள் கூட்டாக ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தன இத்துண்டுப் பிரசுரம் புகையிரத நிலையத்தில் பரந்து வையில் காணப்பட்டது

அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்கம் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கப் ஐக்கிய இலங்கை மீன்பிடித் தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிற் சங்க சம்மேளனம், அரசாங்க லிகிதர் சேவைசங்கம். ஜாதிக சருசங்கம் ஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் அமைச்சரின் நடவடிக்கைகளுக்கெதிராக பிரசாரக் கூட்டங்களும், கூட்டங்களும் நடத்தும்படி வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

### பொலிஸ் பாதுகாப்பு

மந்திரியையும் அவருடன்வந்தவர்களையும் பொதுமக்கள் கிட்டநெருங்காதபடி பொலிஸார் சுறுசுறுப்பாக பணியாற்றிக்கொண்டிருந்தனர்.

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், சனி

அல்லைப்பிட்டி கிழக்கு வாசிகசாலை சனசமூக நிலைய வள்ளுவர் விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விழாவிற்குத் திரு. ச. சிவப்பிரகாசம் தலைமைவகிப்பார். திரு. வை. க. தனயசிங்கம், திரு இ. மகாதேவா திரு.க, வேந்தனார், பண்டிதர் பொ. ஜெகநாதன், திரு.வை.அ. கைலாசநாதன் உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். செல்வி இந்திரா கணபதிப்பிள்ளையின் இன்னிசைக்கச்சேரியும் இடம்பெறும்.

# வடபிரதேச ஆசிரிய சங்கத்தின் வருடாந்த மகாநாடு

## கல்வி மந்திரி நாளை ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம் சனி

வடபிரதேச ஆசிரியசங்கத்தின் வருடாந்த மகாநாடு கொக்குவில் நமசிவாய வித்தியாலயத்தில் நாளை ஆரம்பமாகும்.

கல்வி கலாச்சார மந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொல இம்மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார், யாழ்ப்பாணம் எம் பி. திரு ஜி. ஜி பொன்னம்பலம் சொற்பொழிவாற்றுவார்.

ஆசிரியரது கடமைகளும் அவற்றைப் பூரணமாக நிறைவேற்ற அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் என்னும் கருத்தரங்கம் நடைபெறும்

இக்கருத்தரங்கில் திருவாளர்கள் கே. எஸ் அருணந்தி எஸ். ஹண்டி பேரின்பநாயகம் கே. கேசையா, எஸ், கந்தசாமி, எஸ். அரசரத்தினம், எஸ், விஸ்வலிங்கம், திருமதி ஆனந்தகுமாரசாமி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளில் காரியதரிசி, தனாதிகாரி, அறிக்கைகள், தலைவர் உரை, பிரேரணைகள், உத்தியோகத்தர்கள் தெரிவு ஆகியவை இடம்பெறும்.

சமஸ்கிருத பாடத்தில் விசேஷ சித்திக்காக, பம்பாய் பாரதீய வித்தியாபவனும், சென்னை அமரபாரதி பரீஷா சமிதியாலும் அளிக்கப்பட்ட பரிசுகளை கல்விமந்திரி திரு. இரியகொல வழங்குவார்.

## தேசிய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 188-80 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:-

| | | |
|---|---|---|
| 03 N 0095 | 09 C 0394 | 03 U 0343 |
| 10 K 0488 | 11 U 0373 | 10 G 0954 |
| 07 J 0757 | 07 Y 0783 | 04 M 0878 |
| 11 H 0307 | 12 X 0255 | 13 T 0563 |
| 06 E 0668 | 04 N 0548 | 07 B 0170 |
| 11 W 0313 | 14 D 0522 | 06 K 0325 |
| 06 Z 0751 | 11 P 0734 | 12 A 0308 |
| 07 P 0864 | 04 G 0300 | 07 T 0956 |
| 13 T 0713 | 07 J 0659 | 08 A 0752 |
| 14 L 0321 | 11 Z 0699 | 04 M 0463 |
| 12 X 0897 | 05 W 0764 | 02 G 0562 |
| 11 R 0017 | 12 B 0417 | 03 P 0624 |
| 08 Y 0070 | 10 J 0826 | 11 D 0340 |
| 12 S 0434 | 01 K 0703 | 10 L 0146 |
| 05 D 0284 | 06 W 0256 | 02 B 0733 |
| 02 W 0802 | 07 H 0312 | 14 C 0609 |
| 07 C 0667 | 15 T 0199 | 08 F 0818 |
| 04 G 0935 | 03 Q 0708 | 11 R 0988 |
| 13 A 0665 | 09 M 0041 | 09 F 0154 |
| 14 Z 0099 | 01 B 0354 | 04 K 0115 |
| 15 F 0527 | 11 V 0010 | 02 O 0147 |
| 03 J 0196 | 02 J 0175 | 13 V 0018 |
| 09 Q 0050 | 07 X 0858 | 06 H 0548 |
| 09 L 0234 | 08 G 0570 | 01 U 0563 |
| 05 G 0848 | 09 S 0136 | 12 A 0305 |
| 07 M 0648 | 07 K 0954 | 14 P 0742 |
| 04 K 0888 | 14 C 0569 | 05 C 0926 |
| 09 U 0235 | 14 A 0896 | 07 R 0758 |
| 08 U 0594 | 04 A 0309 | 07 N 0184 |
| 10 V 0791 | 08 S 0058 | 03 B 0290 |
| 01 P 0156 | 13 D 0419 | 13 N 0247 |
| 01 M 0308 | 15 L 0677 | 07 K 0271 |
| 04 Z 0878 | 06 V 0199 | |
| 14 H 0861 | 04 D 0499 | |

# சதி!

## தொலைபேசி தொடர்புகள் துண்டிப்பு

புத்தளம், வெள்ளி

புத்தளம்-கொழும்பு தொலைபேசித் தொடர்புகளைத் துண்டிக்கச் செய்யப்பட்ட சதி முயற்சி உரிய நேரத்தில் புத்தளம் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

சிலாபத்துக்கும் புத்தளத்துக்குமிடையிலான தொலைபேசிக் கம்பிகளைப் பலவிடங்களில் அறுத்ததுடன் முந்தல் பகுதியில் முற்றாகச் சில இடங்களில் கம்பிகளை அப்புறப்படுத்தியுமுள்ளதால் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இதுசம்பந்தமாகப் புத்தளம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அபேரி, புத்தளம்-சிலாபம் வழி தந்திக்கம்பி மேற்பார்வை ஊழியர் ஒருவரைக் கைதுசெய்தார். பொலிஸாரால் மேற்கொண்டும் விசாரணைசெய்யப்படுகிறது.

## ஸ்டான்லி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் மேயர் திரு மகாதேவா மாநகரசபை எஞ்சினியர் திரு இ வைத்திலிங்கம் இலங்கை போக்குவரத்து சபை அதிகாரியொருவர் ஆகியோர் இக்கக் காணிக்குச் சென்று பஸ்நிலையம் அமைப்பதற்கான வசதிகள் பற்றி நேரில் பரிசீலனை செய்தனர்.

பஸ்நிலையம் அமைப்பதற்கு இக்கக் காணியில் போதிய வசதிகளிருப்பதாக அவர்கள் அபிப்பிராயப் பட்டதாகவும் பெரும்பாலும் இந்த இடத்திலேயே புதிய பஸ்நிலையம் அமைக்கப்படுமென்றும் தெரிகிறது.

புதிதாக பஸ்நிலையம் இக்காணியில் அமைக்கப்பட்டால் பஸ் நிலையத்திற்கு ஸ்டான்லி வீதி வழியாகவும் மின்சாரநிலைய வீதி வழியாகவும் செல்லரம் இரண்டு வாசல்கள் வைப்பதற்கு மின்சார நிலைய வீதியில் கடைகள் கட்டப்பட்டுள்ளது சிறிது இடைஞ்சலாக இருப்பதாகவும் இதுதான் இந்த இடத்தைத் தெரிவுசெய்வதில்சிறிது தாமதமிருப்பதற்குக் காரணமென்றும் தெரிகிறது. மின்சார நிலைய வீதியில் இக்கக் காணியின் எல்லையிலுள்ள சிறுகடைகளை கவீகரித்து பஸ்நிலையத்திற்கு வசதியேற்படுத்தலாமென மேயர் யோசனை தெரிவித்திருக்கிறார்.

நகரபட்டின திட்ட இலாகா அதிகாரியொருவரும் போக்குவரத்துச்சபை வடபிரதேச முகாமையாளரும் மேயருடன் அந்தக்காணிக்குச் சென்று பார்வையிட்டனர்.

### 28-ந் திகதி மந்திரியுடன் பேச்சு

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தின் அழைப்பையேற்று யாழ்ப்பாண மேயர் இம்மாதம்28ந்திகதி அவரைக் கொழும்பில் சந்தித்துப் பேசவிருக்கிறார் அப்பொழுது புதிய பஸ்நிலையம் அமைப்பது சம்பந்தமாக ஒரு முடிவு எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மந்திரிக்கு எம். பி. கோரிக்கை

பம்பலப்பிட்டி. வெள்ளி

ஹுனுப்பிட்டியிலிருந்து ஹுனுப்பிட்டியா, களனி, பாணந்துறை ஆகிய இடங்களுக்குச் செல்லும் தொழிலாளர்கள் ஹுனுப்பிட்டியிலிருந்து செல்லும் ரயில் தாமதித்து செல்வதால் தமது வேலை ஸ்தலங்களுக்கு நேரம் தாமதித்தே செல்லவேண்டியிருப்பதாகவும் இதனை நிவிர்த்திசெய்யுமுகமாக அவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குச் செல்லும் வகையில் ரயில் நேரசூசியை மாற்றியமைக்குமாறு நியமன எம் பி. திரு. வி. அண்ணாமலை போக்குவரத்து மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்,

ஹுனுப்பிட்டியிலிருந்து பாணந்துறைக்கு நேரடியான ரயில் சேவை நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் திரு. அண்ணாமலை மந்திரியைக்கோரியுள்ளார்.

## காணி கிடைக்கும்

பம்பலப்பிட்டி, வெள்ளி

உணவு உற்பத்தித் திட்டத்திற்காக, செப்டம்பர் மாதம் முதல் அரசாங்கம் காணிவழங்க விருப்பதாக வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கென 500 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படுமென அரசாங்க பட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

# சந்திர மண்டலத்தில் மனிதன் குடியேறலாம்!

## 1980-ம் ஆண்டு சாத்தியமாகலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை

வாஷிங்டன், ஜூலை 28

1980-ம் ஆண்டில் மனிதன் சந்திரமண்டலத்தில் குடியேறலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இன்னும் 15 வருட காலத்திற்குள் இதற்கான முயற்சிகள் யாவும் செய்யப்பட்டுவிடும் எனவும் விஞ்ஞானிகள் இது குறித்து செய்துவரும் முயற்சிகள் வெற்றியளிக்கும் எனவும் தேசிய வானவெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடமையாற்றும் உயர்தர விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

1980-ம் ஆண்டளவில் மனிதன் சந்திரமண்டலத்தில் போய்க் குடியேற வாய்ப்புகள் இருப்பதாகவும், பூமியில் வாழ்வது போல மனிதன் சந்திர மண்டலத்திலும் வாழக் கூடியதாகவிருக்கும் எனவும் அந்த உயர்தர விஞ்ஞானி தெரிவித்தார்.

நான்காவது மரீனர் விண்வெளிக்கப்பல் செவ்வாயின் பத்தாவது புகைப்படத்தையும் அனுப்பி வைத்துவிட்டது. மரீனர் 4 விண்வெளிக்கப்பலிலிருந்து கிடைத்த பத்துப் புகைப் படங்களில் இதுவரை மூன்று புகைப்படங்களே வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட மூன்று புகைப்படங்களிலும் காணப்பட்ட கறுப்புப் பகுதிகள் மரஞ்செடிகள் அடர்ந்த இடமாக இருக்கலாம் என விண்வெளி நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு இன்று ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை 28

அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு நாளை ஆரம்பமாகிறது. இம்மகாநாட்டில் கட்சி உடன்பாடு குறித்தும் கோவாவின் எதிர்காலம் குறித்தும் முக்கியமாக ஆராயப்படும். இருநாள் மகாநாட்டுக்கான ஆயத்த காரியக் கமிட்டிக்கூட்டம் இன்று நடைபெற்றது.

பெங்களூரில் நடைபெறும் இம்மகாநாட்டுக்கு காங்கிரஸ் கட்சி அக்கிராசனர் திரு. காமராஜரும், பிரதமர் லால்பகதூர்சாஸ்திரியும் அங்கு சென்றுள்ளனர்.

காங்கிரஸ் அக்கிராசனரும் இதர நிர்வாகிகளும் இரண்டாம் தடவை பதவி வகிப்பதற்கு இப்போதுள்ள தடையை ரத்துச் செய்ய காங்கிரஸ் உயர்தர வட்டாரம் முயற்சித்து வருகிறது.

1967-ல் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் கட்சிக்கு தொடர்ந்து தலைமை தாங்கி வழிகாட்ட திரு. காமராஜரையே மீண்டும் தலைவராகத் தெரிவு செய்ய வேண்டுமென காங்கிரஸ் மேலிடம் கருதுகிறது.

கோவா பிரச்னையும், கட்சி மற்றிய உடன்பாடும் பிரதான மானவையாதலால் தலைவரும் இதர நிர்வாகிகளும் இரண்டாம் முறையாகத் தெரிவு செய்யப்படுவதை தடைசெய்யும் கட்சியின் கட்டுப்பாட்டு ஷரத்தை ரத்துச் செய்ய தனியார் தீர்மானங்கள் இன்று நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டன.

காங்கிரஸ் மகாநாட்டில் அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கைபற்றியும், கட்சி உடன்பாட்டை ஆதரித்தும் உத்தியோக பூர்வமான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படவிருக்கிறது. உடன்பாட்டில் சில ஷரத்துகளைக் குறை கூறும் தீர்மானங்களும் கொண்டுவரப்படும். ஆனால் கட்சி சம்பந்தமான உடன்பாட்டை காங்கிரஸ்கட்சி மகாநாடு பெரும்பாலும் ஆதரிக்கும் என்றே நம்பப்படுகிறது.

## பத்திரிகைத் தொழில் பயிலும் மாணவர்

பேர்லின் ஜூலை, 28

கானா, கெனியா, நைஜீரியா, சியராலியோன், தென்மேற்கு ஆபிரிக்கா, டான்சானியா, உகண்டா ஆகிய ஆபிரிக்கநாடுகளிலிருந்து இங்கு வந்துள்ள 22 மாணவர்கள் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் பத்திரிகையாளர் சங்கத்தால் நடத்தப்படும் கல்லூரியில் பத்திரிகையாளர் தொழிலில் பயிற்சி பெற்று வருகின்றனர். சுவின பத்திரிகை பொன்றின நிர்வகிப்பது சம்பந்தமான செயல்முறைத்திட்டமும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களில் ஒன்றாகும்.

அவர்கள் பத்திரிகைத்தொழிலின் அடிப்படை விடயங்கள் சம்பந்தமாக கடந்த டிசம்பரிலிருந்து பயிற்சிபெற்று வந்துள்ளனர். தத்தம் நாடுகளுக்குத் திரும்பியதும் பத்திரிகாலயங்களில்பொறுப்பான பதவி வகிக்க இந்தப் பயிற்சி அவர்களுக்குப் பயன்படும். அவர்களுக்கு விரிவுரைகய நிகழ்த்தும் விரிவுரையாளர்களில் பிரபல பிரிட்டிஷ் வக்கீல் திரு. டி. என். பிரிட் கியூ. சி. யும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெற்றோரின் ஒத்துழைப்பு

பெர்லின் ஜூலை, 22

பெர்லினில் நடந்த ஒருபெற்றோர் மாநாட்டில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள சமார் 600 பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதர பொது ஸ்தாபனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இளைஞர்களுக்கு சோஷலிசக் கல்வி போதிப்பதில் பாடசாலைகளுக்கும் பெற்றோர்களுக்கு மிடையேயுள்ள ஒத்துழைப்பு சம்பந்தமான பிரச்சினைகளை மாநாடு விவாதித்தது.

## விமானப்படை விஸ்தரிப்பு

கோலாலம்பூர், ஜூலை 28

மலேசியா அரசாங்கம் தனது விமானப்படையை விஸ்தரிப்பதுபற்றி அறிவித்துள்ளது. மேலும் பல விமானங்களும், ஜெட் விமானங்களும், விமானப் படைக்கு வருவிக்கப்படவிருப்பதாகவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேலும் நிதி ஒதுக்கப்படவிருப்பதாகவும் மலேசிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## கன்சர்வேட்டிவ் தலைவர் ராஜினமா

லண்டன், ஜூலை 28

பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரிட்டிஷ் பிரதமருமான சேர் அலெக்ஸ் டக்ளஸ்ஹியூம் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். ராஜினாமாவுக்கான காரணம் எதுவும் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை. புதிய தலைவர் தெரிவு அடுத்தவாரம் நடைபெறும். இதுகுறித்து இரு முக்கியஸ்தர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகிறது.

## நதிகளின் சீற்றம்

கராச்சி, ஜூலை 28

கிழக்கு பாகிஸ்தானில் ஆறு நதிகள் உச்ச நீர்மட்டத்துக்கு மேலாக பாய்வதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. பிரமபுத்திரா நதி கடந்த இரண்டு நாட்களாக பெருக்கெடுத்துள்ளதாகவும், மற்றும் நதிகளின் நீர்மட்டம் நேற்றிரவு உயர்ந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நதிப்பெருக்கால் ஆயிரம் ஏக்கர்கணக்கான நெல் வயல்களும், உபஉணவு தோட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

## நிதியை பெருக்க முயற்சி

கண்டி, வியா

பாழ்ப்பாண விளையாட்டுத்திடல் அமைப்பு சங்கத்தின் கண்டிச் செயற்குழு யாழ்-விளையாட்டு அரங்கை மேலும் கட்டுவதற்காக நிதி சேர்ப்பதில் முயற்சி எடுத்துவருவதாகத் தெரியவருகிறது. கண்டிக் கிளைக்கு போஷகரான முதலியார் கே. வி. ரங்கநாதன் நிதியைப் பெருக்குவதற்கான திட்டங்களை தற்பொழுது ஆராய்ந்து வருகின்றார்.

இதன் முன்னோடியாக வெள்ளவத்தை ராஜ் கலைச்சுவை நாடக மன்றத்தின் 'அவமானம்' என்ற நாடகம் கண்டி புஷ்பதான பாலிக வித்தியாலய மண்டபத்தில் ஜூலை 25ந் திகதி நடைபெறவிருக்கிறது.

## மின்சார விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் மின்சார விநியோகத்தை விஸ்தரிக்கும் வகையில் இந்த வருடம் டிசம்பர் மாதத்திற்குள் இரு ஜெனரேட்டர்களை சுன்னாகம் மின்சார நிலையத்தில் பொருத்தக் காணி, நீர்ப்பாசன மின்சார மந்திரி திரு சி பி டி. சில்வா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த ஜெனரேட்டர்கள் பொருத்துவதற்கான கட்டடங்களை பூர்த்தியாக்குமாறு மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

தற்பொழுது 4000 கில்லோவாட்ஸ் மின்சக்தி உற்பத்திசெய்யும் சுன்னாகம் மின்சாரநிலையத்தில் இரு ஜெனரேட்டர்களும் பொருத்தப்பட்டபின் 14,000 கில்லோவாட்ஸ் மின்சக்தி விநியோகிக்கக்கூடியதாக இருக்குமென நம்பப்படுகிறது. இவ்வித மின்சார விஸ்தரிப்பு யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவுமெனக் கருதப்படுகிறது.

## லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு, வெள்ளி

கடந்த சில தினங்களாக லஞ்சஊழல்பற்றிய புகார்கள், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக் கமிஷனர் திரு. பி. டி. பண்டித குணவர்த்தனா விற்குக் கிடைத்தவண்ணமிருக்கின்றன. தினமும் ஆறு முறைப்பாடு கள் வீதம் கிடைத்திருக்கின்றன.

அதிகமான முறைப்பாடுகள் அரசியல்வாதிகள் உட்பட அரசாங்க ஊழியருக்கு எதிராகவே இருக்கின்றன.

# பொழுதுபோக்கு வசதிகள்மூலம் குடும்பகட்டுபாடு வெற்றியடையும்

## நீதிமன்றத்தில் வழக்கறிஞர்

புத்தளம், வெள்ளி

புத்தளம் 'அசோகா' சினிமாவின், உரிமையாளர் டேவிற் அசோககுமார், புத்தளம் நகரசபைத் தலைவர் ஜனுப் மொகமட் ஏ. காதர் மீது, வேண்டுமென்றும் பிழையாகவும் அசோகா சினிமாவிற்கு சினிமாப்படங்களைத் திரையிட அனுமதி மறுத்ததாகவும், தனிப்பட்ட காரணங்களை, தலைவர் என்ற பதவியின் மூலமாக பாவித்து அனுமதி மறுத்தகாரணத்தால் தனக்கு ஏற்பட்ட நஷ்டத்தொகையாக ரூபா 85000/- செலுத்த உத்தரவிட வேண்டுமென்றும் விண்ணப்பித்த வழக்கை ஆரம்பித்து உரையாற்றுகையில், வாதியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு சி. தியாகலிங்கம் கியூ சி. அதிகமான பொழுது போக்கு வசதிகள் இருக்குமானால் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றி பெறும் என்றும், உள்ளூராட்சி மன்றங்கள் பொழுதுபோக்கு வசதிகளைப்பெருக்குவதன் மூலம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு நன்கு உதவி புரிய முடியுமென்றும் குறிப்பிட்டார்.

இவ்வழக்கை விசாரிப்பதற்காக மாவட்ட நீதிபதி திரு எஸ். என். இராசதுரை விசேஷமாக நியமிக்கப் பட்டிருக்கிறார். புரக்டர் திரு சங்கரப்பிள்ளையின் அனுசரணையுடன் அறவாதி திரு நிமால் செனநாயகாவின் உதவியுடன் திரு சி. தியாகலிங்கம் கியூ.சி. வாதிக்காக வழக்கை நடத்தினார்.

பிரதிவாதியும், புத்தளம் நகரசபைத் தலைவருமான, மொகமட் ஏ. காதருக்காக, புரக்டர் எஸ்.எம்.எம். காசிமின் அனுசரணையுடனும், அறவாதிகள் பார்க்கி, குணசேகர தம்பையா ஆகியோரின் உதவியுடனும், வழக்கறிஞர் இஸாதீன் மொகமட் ஆஜரானார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## உடப்பு திரௌபதி வருடாந்த உற்சவம்

புத்தளம், வெள்ளி

ஜூலை மாதம் 25ந் தேதியிலிருந்து சரித்திரப் பிரசித்தி பெற்ற உடப்பு ஸ்ரீபார்த்தசாரதி திரௌபதிதேவி ஆலயத் திருவிழா ஆரம்பமாகிறது. இவ்விழாக்கள் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும். 25ந் தேதியிலிருந்து தினமும் மகாபாரத உபந்நியாசங்கள் நடைபெறும். ஆகஸ்ட் 12ந் தேதி இரவு 12 மணிக்கு பட்டாபிஷேக வைபவமும் நடைபெறும். ஆகஸ்ட் மாதம் 11ந் தேதி மாலை 5 மணிக்குத் தீமிதிப்புவைபவம் நடைபெறும்.

## மந்திரியைவரவேற்க ஏற்பாடு

சுழிபுரம், வெள்ளி

உள்ளூராட்சி அமைச்சர் திரு எம். திருச்செல்வத்துக்கு ஒரு வரவேற்பு உபசாரனை வருகிற மாதம் முதல் வாரத்தில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜம் அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளன. விரிவான முறையில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்தில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் எல்லா சனசமூக நிலையங்களும் கலந்து கொள்ளும்.

## தந்திக்கம்பி திருட்டு அதிகரிப்பு

சுழிபுரம், வெள்ளி

கட்டுடைப் பகுதியில் தந்திக் கம்பி திருட்டு கடந்த சில நாட்களாக அதிகரித்துவருவதாக அறியப்படுகிறது. சில விஷமிகளால் இச்செயல் திட்டமிட்டப்பட்டு நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. தொடர்ந்து நடைபெறும் இவ்விஷமத்தனத்தால் வலநூற்றுக்கணக்கான ரூபாய் நஷ்டமடைவதாக அறியப்படுகிறது.

# கப்பல் பிளந்தது!

சென்னை, ஜூலை 28

சென்னையிலிருந்து கனரகப் பொருட்களை ஏற்றிச்சென்ற சைபீரியக் கப்பல் ஒன்று நடுக்கடலில் இரண்டாகப் பிளந்து நீரில் மூழ்கியது. இதில் கடமையாற்றிய 37 ஊழியர்களும் காப்பாற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. 'நரவாசி' என்ற இந்தக் கப்பல் நேற்றிரவு விபத்துக்குள்ளானதாம்.

## கந்த முருகேசனுருக்கு அஞ்சலி

உடுப்பிட்டி, வெள்ளி

"பெரிய கல்லூரிப் படிப்பை அறியாத புலோலிப் புலவர் தங்கத் தமிழ்த் தாத்தா கந்த முருகேசனர் தமது இயல்பான சக்தியால் இன்று நாவலரும் பாவலரும் போற்றுமளவிற்கு அழியாப் புகழ் பெற்றுள்ளார். அவரது இனிய சுபாவமும் கள்ளம் கபடமற்ற போக்கும் தான் அவர்மீது அழியா அன்பை ஏற்படுத்தியுள்ளது. சிலர் நல்ல அறிவாளிகளாக இருந்தும் தற்புகழ்ச்சியையும் போலி மதிப்பையும் விரும்பி பொதுமக்களின் மதிப்பை இழக்கின்றனர். இதற்கு விதிவிலக்காகத் திகழ்ந்தும் தமிழிலே கவிபாடிய கந்த முருகேசனுரின் புகழுடல் தமிழுள்ள வரை அழியாது."

இவ்வாறு நெல்லியடி தமிழ்க் கலைமன்றம் நடாத்திய கந்த முருகேசனுரின் நினைவு தினக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. க. ஞானசுப்பிரமணியம் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

தமிழன் நன்றி மறவாதவன். தன்னைப் போற்றியவர்களையும், வளர்த்தவர்களையும் பாராட்டாமல் அவன் விடுவதில்லை. மேல் நாடுகளில் கந்த முருகேசனுரைப்போன்ற அறிஞர்களை அரசாங்கம் விசேஷ சலுகைகளுடன் கவனிக்கும். மாதாமாதம் நன்கொடையும் போக்குவரத்து வசதிகளும் செய்து மொழி வளர்ச்சிக்காக ஆராய்ச்சி செய்யும்படிவிடுவார்கள். ஆனல் இங்கு நிலை அப்படியில்லை.

திரு செ. சுவர்ணராசா பேசுகையில், "மணிமண்டபம், கற்சிலை முதலியன நிறுவுவதோடுமாத்திரம் நாம் நின்றுவிடாது அவர் ஆக்கிய அரிய படைப்புகளை உணர்ந்து அவற்றின் படி ஒழுகுவதே சிறந்த நினைவும் அவருக்குச் செய்யும் அரிய தொண்டுமாகும்" என்று கூறினர்.

திரு. கே. மகாலிங்கம், திரு. க. பாலசுப்பிரமணியம், ஆசிரியர் கே. செல்வநாயகம் ஆகியோரும் பேசினர்.

திரு. கந்தமுருகேசனுர் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## பழைய கொள்கைகளை திருத்த நடவடிக்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

இரு பதாண்டு காலமாக கிராம முன்னேற்ற இயக்கங்களினுல்பின்பற்றப்பட்டவரும், கொள்கைகளும், திட்டங்களும் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன.

கிராம முன்னேற்ற அதிகாரிகளின் நிர்வாக அறிக்கையில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய

# சங்கீதநடன விழா இன்று மாலை ஆரம்பம்

## கல்வி மந்திரி தலைமை தாங்குவார்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை இன்று தேசிய சங்கீத நடன விழா இன்று மாலை யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் கல்வி, கலாச்சார மந்திரி ஐ எம் ஆர் இரியகொல்ல தலைமையில் ஆரம்பமாகும். யூனெஸ்கோ சார்பில் நடைபெறும் இவ் விழாவில் 37 பாடசாலைகளும் 21 கலைக்கூடங்களும் கலந்து கொள்ளும்.

வடமாகாணத்திலிருந்து யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை கரணவாய் பொன்னம்பலம் வித்தியாசாலை ஆகிய மூன்று பாடசாலைகள் மட்டுமே கலந்து கொள்ளும்.

நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற இப்போட்டி முதலில் பிரதேசவாரியாக நடைபெற்றது. அதன்பின் அநுராதபுரம், காலி, கண்டி ஆகிய இடங்களில் நடைபெற்றது. இன்று யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நடைபெறுவதுதான் இறுதிப் போட்டியாகும்.

இவ்விழாவில் கோலாட்டம் வாள் நடனம், கண்டிய நடனம் மேனாவாதிதிய இசை மற்றும் கிராமிய நடனங்கள் உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறும் காலை மாலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழா இரவு 10 மணிவரை நடைபெறும். காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 1 மணி வரை நடைபெறும்.

இரு தினங்களும் கல்வி மந்திரி விழாவிற்குத் தலைமை தாங்குவார். வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி இரியகொல்லை பரிசில்கள் வழங்குவார்.

## மூடப்பட்ட பட்டினசபை

காங்கேசன் துறை, வெள்ளி

காங்கேசன் துறை பட்டினசபை நேற்று காலை மூடப்பட்டிருந்தது. பட்டினசபை உபதலைவரின் உத்தரவுப்படி பட்டினசபை அலுவலகம் பூட்டப்பட்டதுடன் பட்டினசபை உத்தியோகத்தர்களும் வெளியேற்றப்பட்டனர்.

நேற்று காலை பட்டினசபை உத்தியோகத்தர்கள் அலுவலகம் சென்றபோது பட்டினசபை உபதலைவர் திரு வி. இரத்தினராசா அலுவலகக் கதவுகளைப் பூட்டித் திறப்புகளை எடுத்துக்கொண்டார், இதனால் உத்தியோகத்தர்கள் வெளியே நிற்கவேண்டி ஏற்பட்டது. பொலிஸ்நிலையத்தில் இதுசம்பந்தமாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. பட்டினசபை உத்தியோகத்தர்களுக்கும் உபதலைவருக்குமிடையே சில விஷயங்களில் ஒத்துழைப்பு இல்லாமையினால்தான் இத்தகைய சம்பவம் ஏற்பட்டதாக மேலும் தெரியவருகிறது.

## காரைநகர்-மூளீஸ்வரம் பஸ் சேவை

புந்தனம், வெள்ளி

புத்தளம் சிலாபம் மக்களுடைய காரைநகரிலிருந்து முனீஸ்வரத்துக்கு நேரடி கடுகதி பஸ் சேவை ஒன்று புத்தளம் ஊடாக ஏற்படுத்தித்தருமாறு கோரி கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினத்துக்கு அனுப்பிய மகஜர் ஒன்றிற்குப் பதிலளித்திருக்கும் திரு. கா. பொ. இரத்தினம்; இதுபற்றி ஏற்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் விரைவில் பஸ்சேவை ஏற்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## டாக்டர் என். எம். யாழ். விஜயம்

குரும்பசிட்டி, வெள்ளி

சமசமாஜக்கட்சித் தலைவரும் எட்டியாந்தோட்டை எம். பி.யுமான டாக்டர் என். எம். பெரேரா அடுத்தமாதம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கின்றார்.

பருத்தித்துறை கடற்கரையில் நடைபெறவிருக்கும் தர்மகுலசிங்கம் ஞாபகார்த்ததின விழாவில் கலந்து கொள்வதற்காகவே அவர் வருகிறார்.

## கனுங்கோ கவர்னராகுர்

புதுடில்லி, ஜூலை 23

மத்திய மந்திரி திரு. சித்திபாலந்த கனுங்கோ குஜராத் ராஜ்ய கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார், ஆகஸ்ட் முதல் திகதி அவர் பதவி ஏற்பார்.



## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

**முசலி வடக்கு கிராமசபை, அரிப்பு**

1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி (9-8-65) காலை 9-00 மணி வரை பெரிய புன்னச்சி பொற்கேணி (வில்) கிணற்று அரசினர் கல பொவட வேலைக்கு முசலி வடக்கு கிராமசபை அக்கிராசனரால் சீல் வைத்த கேள்விபத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன் பிரதி வடகீழ்ப்பகுதி உள்ளூராட்சி உதவி அதிபருக்கு அதே தேதியில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்களுக்கு ரூபா 10-00-ம் கேள்விப்பத்திர பிணை ரூபா 10-00-ம் கட்டி விண்ணப்பக்காரர்கள் 12-8-65ம் திகதிக்கு முன் கிராமசபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இது சம்பந்தமான விபரங்கள் யாவும் கிராமசபைக் காரியாலயத்திலும், வடகீழ்ப்பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மு. மீராசாயிப், ஜே. பி.**
கிராமசபை அக்கிராசனர்,
முசலி வடக்கு கிராமசபை,
அரிப்பு, 24-7-65 476

### புதிய சமாதான நீதவான்

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை — காங்கேசந்துறை மடத்தை சேர்ந்த கணகரத்தினம் சுப்பிரமணியம் புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரால் 1965ம் ஆண்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

கீழ்ப்பிரிவு ஆண்கள்- செல்வன் க சிவராசா (வீரசிங்க வித்தியாசாலை மீசாலை)

செல்வன் சி அன்ரன் அரியதுரை (ரோ க பாடசாலை, வசாவிளான்)

செல்வன் வ ஜெயராசன் (நவாலி தெற்கு, அ மி பாடசாலை, மானிப்பாய்)

செல்வன் வ தேவராசா, (ஸ்ரீ கணேசவித்தியாலயம், சரசாலை)

கீழ்ப்பிரிவுபெண்கள்-செல்வி மு அசந்த (ரோ க பாடசாலை நவக்குறை)

செல்வி து நிற்கு யோகரத்தினம் (ரோ க பாடசாலை, வசாவிளான்)

செல்வி க சரோஜினிதேவி (உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை)

மத்திய பிரிவு ஆண்கள்-செல்வன் க செல்வராசா (ஸ்ரீ கணேச வித்தியாசாலை சரசாலை)

செல்வன் வ யோகநாதன், (ஸ்ரீ கணேசவித்தியாசாலை, சரசாலை)

செல்வன் ஆ மரியதாஸ், (ரோ க பாடசாலை, நாவாந்துறை)

மத்திய பிரிவு பெண்கள்- செல்வி ச ஜெயகுமாரி, (செங்குந்தா இந்துக் கல்லூரி, கல்லூர்)

செல்வி அ அ வபூரணம், (விசாலாட்சி வித்தியாசாலை மல்லாகம்)

செல்வி ப சரஸ்வதி, (அருணாசல வித்தியாசாலை, அளவெட்டி)

மேற்பிரிவு ஆண்கள்- செல்வன் ஐ ... ராசா, (கமலாசனி வித்தியாசாலை, மட்டுவில்)

செல்வன் வே பாக்கியநாதன், (ஸ்ரீகணேச வித்தியாலயம், சரசாலை)

செல்வன் க மகேந்திரன், (பண்ணாகம், மெய்கண்டான் பாடசாலை, சுழிபுரம்)

மேற்பிரிவு பெண்கள்-செல்வி செ மங்கையர்க்கரசி, (விசாலாட்சி வித்தியாசாலை, மல்லாகம்)

செல்வி த சந்திரமணி, சைவத் தமிழ் வித்தியாசாலை, உரும்பராய்)

செல்வி ஜலின் புஷ்பானந்தரூபி, (சென் தோமஸ் றோ க பாடசாலை, பருத்தித்துறை)

### விளையாட்டுப் போட்டி நடத்த முடிவு

வல்வெட்டித்துறை, வெள்

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுச் சமூகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வல்வை மிசன் பாடசாலையில் தலைவர் திரு. எஸ். சின்னரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பெண்களுக்கான 6 மைல் சைக்கிளோட்டப் போட்டி, ஆண்களுக்கான 15 மைல் மரதன் ஓட்டப்போட்டி, இரண்டரை மைல் நீச்சல் போட்டி என்பன இம்மாதம் 31-ம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் வருடாந்த விளையாட்டுப்போட்டியாக நடத்துவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. எஸ். சின்னரத்தினம், உபதலைவர்: திரு. பீ. வேலும்மயிலும், செயலாளர்: திரு சி. கணேசமூர்த்தி. உபசெயலாளர்: திரு. எஸ். நவரத்தினராசா, தனாதிகாரி; திரு. வி. மோகனதாஸ.

### விளையாட்டு போட்டி

சாவகச்சேரி, வெள்ளி

செட்டியகுறிச்சி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் பூநகரி கிராமசபைத்தலைவர் திரு த. செல்லத்துரையின் தலைமையில் நடைபெற்றது.

மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் உருத்திரன் இல்லம் 90 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது. பிரமா இல்லம் 78 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் விஷ்ணு இல்லம் 60 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் அடைந்தன. பிரதம மத்தியஸ்தராக பூநகரி தபால் நிலைய அதிபர் திரு எஸ். சிவலோகநாதன் கடமையாற்றினார்.

**சம்பியன்கள்**

மேற்பிரிவு ஆண்கள்: சி கணபதி பிள்ளை, க. பத்மநாதன். மேற்பிரிவு பெண்கள்: ந. இராசலட்சுமி. மத்தியபிரிவு ஆண்கள்: த. சிவபாலசுப்பிரமணியம். மத்தியபிரிவு பெண்கள்: செ. கமலாதேவி.

### பாடசாலை ஊழியர் சங்கம்

**மந்திரியை பேட்டிகாணும்**

யாழ்ப்பாணம், சனி

வட இலங்கை பாடசாலை ஊழியர் சங்கத்தினர் கல்வி கலாச்சார மந்திரி திரு ஐ எம். ஆர். ஏ இரியகொல்லையை ஞாயிறுக் கிழமை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடாத்த விருக்கின்றனர்.

கல்வி மந்திரியை சந்திக்கும் பொழுது வட-இலங்கை பாடசாலை ஊழியரின் பழைய சேவை, பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் ஊழியர்களுக்கு வழங்கப்படாத வருடாந்த உயர்வு, பென்ஷன், ஆய்வுகூட உதவியாளர் சம்பளம் முதலியன பற்றி ஆராயப்படுமெனத் தெரியவருகிறது.


## பார்ஃபும் நிர் 8




ஓர்
சிறந்த
ஓடிக்கோலன்

ஒரு தடவை மட்டுமே உங்கள் உடம்பில் தெளித்துப்பாருங்கள்! அது உங்களுக்கு இதமளித்து, நாள் பூராவும் மணித்தியாலக் கணக்காக உங்களைச் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் இருக்கச் செய்யும்.

உங்கள் தேவை எதுவோ அதற்கேற்ற தகுந்த காரத்துடன் தயாரிக்கப்பட்டது.




சிறிய, நடுத்தர, பெரிய, சிக்கனமான, எனும் நான்கு வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

பாஃபும் சவர லோஷன்
பாஃபும் பேபி ஓடிக்கோலோன்
பாஃபும் கோலோன் "கேப்றிஸ்" (வாசனைத் கொலோன்)

ஏக விநியோகஸ்தர்கள்:
மல்லர் அன்ட் ஃபிப்ஸ் (சிலோன்) லிமிட்டெட்


## வரி விளம்பரம்

### கல்வி

G A Q E, G. S. Q E. வகுப்புகள், யாழ் பாணப் சிங்கள மகாவித்தியாலயத்தில் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகிறது. சேரவிரும்புவோர் உடனடியாகச் சேரவும்.

விண்ணப்பிக்கவும்:- சி. என். இராசரத்தினம், சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர் 686

ஆரம்ப வகுப்புத் தொடக்கம் G. C. E வரை (ஆங்கிலம் உட்பட) சகல பாடங்களும் இலவசமாகக் கற்பிக்கப்படும் திருமதி ச மாகிரெட், 18, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 692

### வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் பலாலி—யாழ்ப்பாண ஹேட்டுக்கருகாமையில் நவீன வசதிகளுடன் ஒரு வீடு 1-8-1965 தொடக்கம் நியாயமான வாடகைக்கு விடப்படவிருக்கிறது. விரும்பினோர் பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தி. தம்பித்துரை, வருத்தலைவிளான், தெல்லிப்பளை. 672

### தொய்வு, கசம், நீரிழிவு, வெண்மை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

கோவில் கொடிஸ்தம்பம் ஒன்று விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 83 A, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 688

### வானொலி நிகழ்ச்சிகள் கொழும்பு

**சனி 24-7-65**

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமிய கீதம்,

பகல்: 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு: 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செம்திக்கருவ், 7-00 சங்கீதக்கச்சேரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 விமர்சனம், 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 25-7-65**

காலை: 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 தமிழ்நாடிசை, 8-00 பெளத்தாஞ்சலி, 8-15 தமிழ்மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி 9-00 ஞாயிறு பாடசாலை, 9-30 கிறிஸ்தவ கீதங்கள், 11-30 சிறுவர் மலர்.

பகல்: 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-15 பாட்டு, 5-45 படப்பாட்டு.

இரவு 6-10 வாத்தியஇசை, 6-15 நிக்குப்பிட்டி சிவசுப்பிரமணிய கோவிலில் இருந்து பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் அஞ்சல் 7-15 நாடக அரங்கு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மகளிருக்கு - மாதர் நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை

### தேவை

யாழ்ப்பாணத்தில் ஆர்டர்கள் சேகரிப்பதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களிலும் ஆர்டர்கள் சேகரிப்பவர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். சம்பளமும், கமிஷனும் கொடுக்கப்படும் கலாசேதி ஆட்ஸ் இன் ஸ்ரீஸ் பஸ்நிலையத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 683

எமது "ஜெய" தயாரிப்புகளை விற்பனைசெய்வதற்கும் பெண்கள் தேவை, உடனடியாக விண்ணப்பிக்கவும். திருமதி ச, மாகிரெட், 18, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 691

பயிற்றப்பட்ட முகாமையாளர் / லிகிதர் தேவை. வேதனம்: ரூபா 60/- தொடக்கம் 100/- வரை. பின் உயர்வுண்டு. தொடர்பு கடிதமூலம் மட்டும். தலைவர், வகுப்பு தொழிலாளர் சங்கம், சட்டை ஸ்டேசன், காங்கேசன்துறை. 678

### விளையாட்டு வாரம்

கோண்டாவில், வெள்ளி

வல்வெட்டித்துறை நெடியகாட்டு இளைஞர் கழக வருடாந்த விளையாட்டுப் போட்டி வாரம் இம்மாதம் 26ந் தேதி ஆரம்பமாகவிருக்கிறது. போட்டி வார இறுதி நிகழ்ச்சிகளில் இரண்டரை மைல் நீச்சல் போட்டியும், பெண்களுக்கு 6 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும், ஆண்களுக்கு பதினைந்து மைல் மரதன் ஓட்டப்போட்டியும் முக்கிய இடம்வகிக்கும்.

### உள்நாட்டு பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, வெள்ளி

உள்நாட்டு உற்பத்திப் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைக்குக் கொண்டுவருவதற்கான ஒரு திட்டத்தைக் கைத்தொழில் மந்திரி அமுல் நடத்தத் தீர்மானித்துள்ளார்.

ஏற்கனவே உள்நாட்டு உற்பத்திப் பொருட்களான சயிக்கிள், டயர், டியூப் ஆகியவைகளுக்கு வர்த்தக இலாகா கட்டுப்பாட்டு விலை மதித்துள்ளது.

### உப-தபாலதிபர்களின் பொதுக் கூட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி

அகில இலங்கைத் தமிழ் பேசும் உப-தபாலதிபர்கள் தொழிற்சங்க யாழ்ப்பாணக் கிளையின் விசேஷ பொதுக் கூட்டம் 25-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. தாய்ச்சங்கத் தலைவர் திரு. க. கைலாசபிள்ளை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சகல தமிழ்பேசும் எம். பி. க்களும் கலந்துகொள்வார்கள்.

பின்வரும் பிரேரணைகளும் இக்கூட்டத்தில் கொண்டுவரப் படவிருக்கின்றன.

உபதபாலதிபர்களை நிரந்தர ஊழியர்களாக்கி ஒய்வுகால வேதனம் பெறுபவர்களாக்க வேண்டும். வேதனம் நிர்ணயிக்கவேண்டும்.

### உற்பத்தி அதிகரிக்க விரிவான திட்டம்

கொழும்பு, வெள்ளி

நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அடுத்த மூன்று வருடத்திற்கு நெல் உற்பத்திக்கு, மேலும் நிலங்களை ஒதுக்குவதற்கும், விவசாய உணவு மந்திரி ஓர் விரிவான திட்டத்தை அமுல்நடத்த, அரசாங்கத்தின் அனுமதியை பெறவிருக்கிறார். இத்திட்டத்தின் மூலம் 180,000 தொன் அரிசியை பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# "உத்தரவை நிறைவேற்ற மறுத்தால் அறிவிக்கவும்"

## நிறைசேரிக் காரியதரிசி அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் (பிரஜாவுரிமைப் பிரிவு) உதவிக் காரியதரிசி திரு. ஸ்டான்லி ஜயவீராவின் விவகாரம் பற்றி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்கா, தனது விசேஷ அதிகாரியின் கீழ் அடுத்த வாரம் விசாரணை செய்வாரென அறியப்படுகிறது.

உத்தரவுகளை நிறைவேற்றுவதற்கு மறுக்கும் ஊழியர்கள் பற்றியும் மேலதிக நேர வேலை செய்யும் ஊழியர்கள் பற்றியும் தமக்கு அறிவிக்குமாறு இலாகாத் தலைவர்களை திறைசேரிக் காரியதரிசி கேட்டுள்ளார்.

## இன்று மந்திரிக்கு நல்லூரில் வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கு நல்லூர்த் தொகுதி மக்கள் இன்று நடத்தும் வரவேற்பில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அடங்கியிருக்கும் திரு. முருகரத்தினம் வரவேற்புரையை வாசித்து அளிக்கிறார்.

கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரியை உயர்தர தொழில் நுட்பக்கல்லூரியாக மாற்றியமைத்துத் தரவேண்டும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு ஓர் விஞ்ஞான ஆய்வுகூடமும் விஞ்ஞானக்கல்வியை போதிக்கத் தகுந்த ஆசிரியர்களையும் அமைத்துத்தரவேண்டும்.

நீண்டகாலமாக இருந்து வந்த திருநெல்வேலி சைவ ஆசிரியகலாசாலையை மீண்டும் முன்னிருந்தபடியே அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சென்ற புயல் காற்றில் சேதமடைந்த எங்கள் தொகுதிப் பாடசாலைகளைக் கவனித்துத் திருத்தி அமைத்தும் தேவையான உபகரணங்களைத் தந்துதவுமாறு வேண்டுகின்றோம்.

## பாரதவிழா

காங்கேசன்துறை, வெள்ளி

மாவிட்டபுரம் கம்பன் கலைக் கழகம் இம்மாதம் 30-ந் திகதி மாவிட்டபுரத்தில் பாரதவிழா வொன்றினை நடத்துகிறது. இவ் விழாவையொட்டி சமயகுரவர்கள் நால்வரைப்பற்றி கட்டுரைப் போட்டி ஒன்றும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

## கூப்பனுக்கு பொருட்கள்?

பம்பலப்பிட்டி, வெள்ளி

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய முக்கிய பொருட்களை கூப்பன் மூலம் பெற்றுக்கொள்ளும் முறையை ஏற்படுத்தவதற்கான ஒரு திட்டத்தை எதிர்வரும் அரசாங்க பார்லிமெண்டரிக் கூட்டத்தில் பல எம். பிக்கள் பிரேரிக்கவிருக்கிறார்கள்.

## கூ. மொ. வி கமிஷன் விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு வெள்ளி

திரு ரத்ன தேசப்பிரிய சேனநாயகா சுகவீனமுற்றிருப்பதால் இன்று காலை நடைபெறவிருந்த கூ. மொ. வி விசாரணை கமிஷன் செவ்வாய்க்கிழமை காலைவரை ஒத்திவைக்கப்பட்டது.

REGAL - JAFFNA
NOW SHOWING
Margaret Rose Keil
in
THAT KIND
OF GIRL
(The Shock Film of the Year!)
(Adults only))

## உபதபாற்கந்தோரில தொலைபேசி இல்லை

உடுப்பிட்டி, வெள்ளி

"தினசரி பல நூற்றுக்கணக்கான மக்களுக்குச் சேவை செய்யவேண்டிய நிலையிலுள்ள வதிரி உப தபாற் கந்தோருக்குத் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தித்தருவதாக கடந்த ஒரு வருடமாக அரசாங்கம் ஏமாற்றிவருகிறது. இதனால் புலவராவோடை, தோனியோடை, தேவரையாளி திக்கம் முதலிய இடங்களிலுள்ள மக்கள் தொலைபேசி இணைப்பின்றி அவசர நேரங்களில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இக்குறையை உடனடியாக அரசாங்கம் நிவர்த்தி செய்யவேண்டும்." இவ்வாறு வதிரி சமூக சேவா சங்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. கே. கிருஷ்ணபிள்ளை பேசுகையில் கூறினர்.

இடப்பரப்பு மிகவும் கூடிய வதிரிப் பகுதிக்குச் சீராகத் தபால் விநியோகம் செய்யும் தபாலூழியர் திரு. சின்னத்தம்பியைத் தாம் பாராட்ட விரும்புவதாக அவர் மேலும் பேசுகையில் கூறினர்.

திரு கே. ஆறுமுகம் பேசுகையில், "இக்காலத்தில் பணத்தைச் சேமிப்பதில் பொதுமக்கள் கவனம் செலுத்துவது குறைவாக உள்ளது. என்னும் தனிநபர்களை முன்னேற்றுவதை விடுத்து நாட்டுமக்கள் அனைவரையும் முன்னேற்றவேண்டுமானால் அரசாங்கத்திடம் பணம் சேமிப்பதே சிறந்த வழி" என்று கூறினர்.

திருவாளர்கள் ஐ இராசதுரை, நடராசா ஆகியோரும் பேசினர்.

வதிரி உபதபாற்கந்தோருக்குத் தொலைபேசி இணைப்பை விரைவில் ஏற்படுத்தித் தரும்படி கோரும் மகஜரைத் தபால்-தந்திப் போக்குவரத்து அமைச்சருக்கும், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திற்கும் அனுப்பிவைப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வதிரிப் பகுதியில் சமூக சேவையில் ஆர்வம் மிக்க தொண்டர்களைச் சேர்ப்பதெனவும், சிரமதான இயக்கமுறையில் இப்பகுதியிலுள்ள சீரழிந்த ஒழுங்கைகளையும், பாழடைந்த பொதுக் கட்டிடங்களையும் சீர்திருத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வாக்காளர்களை..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் பதிவுசெய்வது சம்பந்தமான விஷயம் விவாதிக்கப்பட்டது.

கடந்த அரசாங்கம் இவ் விஷயத்தில் பின்பற்றிய முறைகளில் புதிய அரசாங்கம் மாறுதல் எதுவும் செய்யமுடியாதென அப்போது சுட்டிக்காட்டப்பட்டது.

தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களைப் பதிவுசெய்யும் விஷயத்தில் கிராமசேவகர்கள் அல்லது பொறுப்புள்ள அரசாங்க அதிகாரிகள், தோட்டத்துரையுடன் சேர்ந்து புதிய வாக்காளர்கள் இடாப்புகளில் பதிவுசெய்யப்படுவதை சோதனையிட்டு அனுமதிக்கவேண்டும் எனக் கருதப்பட்டது.

கள்ளக்குடியேற்றத்தைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள விரிவான நடவடிக்கைபற்றியும் பிரதமர் விளக்கினர். முப்படையினரும் பொலிசாரும் கூட்டாக கள்ளக்குடியேற்றத்தைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக பிரதமர் தூதுகோஷ்டியிடம் மேலும் மதிவித்தார்.

## டெஸ்ட் கிரிக்கெட்

லார்ட்ஸ் ஜூலை 28

இங்கிலாந்துக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையே நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 5 விக்கெட் நஷ்டத்திற்கு 227 ரன்கள் எடுத்திருக்கிறது.

# அரசியல் ஆசிரியர்களை விசாரிக்க விசேஷ அதிகாரிகள்

## வித்தியாதிபதி நியமிப்பார்

கொழும்பு வெள்ளி

அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு விசேஷ விசாரணை அதிகாரிகளை வித்தியாதிபதி திரு. ஈ. எச். டி. அல்விஸ் நியமிக்கவிருக்கிறார். விசாரணை அதிகாரிகளாகத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களை இம்மாத முடிவில் வித்தியாதிபதி ஒருமகாநாடு கூட்டுவார்.

இதுவரை 87 ஆசிரியர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் ஒருவர் சென்ற பாராளுமன்றத் தேர்தலில் யு. என். பி. யை ஆதரித்து தீவிரமாக வேலை செய்தவரென்றும் அறியப்படுகிறது. ஐயாயிரம் ஆசிரியர்களுக்கெதிராகப் புகார்கள் கிடைத்துள்ளனவாயினும் இவையெல்லாவற்றுக்கும் பொலிஸாரிடம் ஆதாரமில்லையென்றும் தெரிகிறது. இதே சமயம் மூவாயிரம் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# அமெரிக்க விமானதளத்தை நோக்கி 1000 கொரில்லாக்கள் முன்னேற்றம்

சைகோன், ஜூலை 28

இன்று சைகோனுக்கு வடகிழக்கே 10 மைல் தூரத்திலுள்ள பியன்ஹோ விமானத்தளத்தை நோக்கி 1000 பேர் கொண்ட வியட்காங்கியரின் படை அணி முன்னேறிக் கொண்டுவருவதாயும், இது பெரிய ஒரு ரெஜிமெண்டின் பகுதி எனவும் அமெரிக்க அதிகாரிகள் அறிவித்தனர்.

இத்தளத்தை இப்போது 8000 அமெரிக்க, ஆஸ்திரேலிய, நியூஸிலாந்து துருப்புகள் பாதுகாத்து நிற்கின்றன.

இதற்கிடையில் டானங்கை சுற்றி வசித்துவரும் 5000 சிவிலியன்களை வெளியேற்றும் வேலைகள் ஆரம்பமாகியிருக்கின்றன. வியட்காங்கியரின் தாக்குதலை எதிர்பார்த்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தென்வியட்னாமில் ஐந்தில் நான்கு பகுதி வியட்காங்கியரின் கட்டுப்பாட்டில் இருப்பதாய் ஹனோய் வானொலி இன்று அறிவித்தது. இம்மாதத்தில்மட்டும் 1260 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டோ, காயமடைந்தோ, சிறைப்பிடிக்கப்பட்டோ இருப்பதாயும் அது மேலும் கூறியது.

பியன்ஹோவுக்கருகில் நடைபெற்ற சண்டையில் அமெரிக்க, ஆஸ்திரேலிய துருப்புகள் 230 பேருக்குச் சேதம் ஏற்பட்டதாய் தொடர்ந்து அது கூறியது.

# 'மத பக்தி இல்லாதவர்களுடன் மக்கள் ஒத்துழைக்கக்கூடாது'

## வவனியாவில் தொழில் மந்திரி பேச்சு

வவனியா, வெள்ளி

தொழில் வீடமைப்பு மந்திரி ஜனாப் எம். எச். மகைது யாழ் தேவியில் இன்று காலை 10-55 மணிக்கு வவனியாவுக்கு வந்து சேர்ந்தார். புகையிரத நிலையத்தில் மந்திரியை வவனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. சிவசிதம்பரம் வவனியா அரசாங்க அதிபர், நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா, நகரசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் அப்துல்லா, ஹமீட் முதலியோர் மாலையிட்டு வரவேற்று ஊர்வலமாகப் பள்ளிவாசலுக்கு அழைத்துச்சென்றனர். பள்ளிவாசலுக்கருகாமையில் மந்திரி முகமது அரபிக் பாடசாலையொன்றிற்கு அடிக்கல் நாட்டினர்.

முற்றவெளிபரங்கில் ஜனாப் எம். எம். லெப்பை தலைமையில் நடைபெற்ற பிரமாண்டமான ஒரு கூட்டத்தில் மந்திரி பேசிய போது, மதபக்தியில்லாத எந்த ஒரு அரசியல் கட்சியையோ, அரசாங்கத்தையோ பொதுமக்கள் நம்பக்கூடாது என்றும் கடவுள் பக்தியில்லாத எவருடனும் ஒத்துழைக்கக்கூடாதென்றும் குறிப்பிட்டார்.

முஸ்லிம்மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சகல இனமக்களுடனும் ஒத்துழைத்து நாட்டின் அபிவிருத்திக்கு உதவவேண்டும் என மந்திரி கேட்டுக்கொண்டார். ஒன்றுமையின் மூலமே முன்னேற்றம் சாத்தியம் என்றும், ஒரு சமூகத்தின் துன்பங்களை இதர துன்பங்களாகப் பாவிக்க வேண்டும் என்றும் திரு முகம்மது தொடர்ந்து குறிப்பிட்டார்.

முன்னாள் எம். பி. திரு. வி. சுந்தரலிங்கம், திரு சிவசிதம்பரம் எம். பி., முதலியார் எஸ். சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர்.

## கந்தசுவாமி கோயில் நவமண்டபம்

உரும்பராய், சனி

உரும்பராய் கந்தசுவாமி கோயில் நவமண்டபப் புகுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெறும்.

ஊர்வலம் பிற்பகல் ஐந்து மணிக்கு உரும்பராய் ஞானவைரவர் கோவிலிருந்து ஆரம்பமாகி மண்டபத்தை அடையும். இதைத் தொடர்ந்து பக்திப்பாடல்கள், விசேஷ பூசை, பேச்சு, இன்னிசை விருந்துடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## அமெரிக்க உதவி தாமதமாகாது

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கு அளிக்கப்படவிருக்கும் உதவி தாமதிக்கப்படமாட்டாது என தேசிய அரசாங்கத்திற்கு ஐக்கிய அமெரிக்கா அறிவித்துள்ளது. இது சம்பந்தமாக ஆறு நாடுகள் வாஷிங்டனில் இம்மாதம் 25ம் தேதி கூடவிருக்கிறது.

## வேண்டுகோள்

லண்டன், ஜூலை 28

இந்தோனேஷியாவுக்கு ஹெலிகோப்டர்களை விநியோகிக்கவேண்டாமென பிரிட்டன் பிரஞ்சு அரசாங்கத்தை கேட்டுள்ளது. இந்தோனேஷியா மலேசியாவுடன் பகைமை கொண்டுள்ளதாலேயே பிரஞ்சு அரசாங்கத்திடம் பிரிட்டன் நேரடியாக கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மகத்தான 3வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) மொடேர்ன் (பதுளை)

விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன், எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த




லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின் தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.